**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.</u>**

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 5/2017 | பி.வா.சா. | : 1 |
| பெயர் | : ராமசாமி | த/பெ. | : ஆறுமுகம் |
| தாலுகா | : நத்தம் | கிராமம் | : குட்டூர் |
| தேதி | : 16.03.2026 | வயது | : 63/2026 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2. இந்த வழக்கில் நான் இரண்டாம் பிரதிவாதி என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு 1ம் பிரதிவாதியான ஆண்டிச்சாமி என்பவர் இறந்து விட்டார் என்றால் சரிதான். 3 முதல் 11 வரையிலான பிரதிவாதிகள் இறந்து போன ஆண்டிச்சாமி என்பவரின் வாரிசுகள் என்றால் சரிதான். அசல் வழக்கானது மொத்தம் 1 ஏக்கர் 52 செண்டுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கியதாக சொல்லப்படும் சர்வே எண்.183/5க்காக வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் எனது பிரமாண வாக்கு மூலத்தில் எனக்காகவும், மற்ற பிரதிவாதிகளுக்காகவும் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து சாட்சியம் அளிப்பதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். நான் ஏற்கனவே தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் நானும், 1ம் பிரதிவாதி ஆண்டிச்சாமியும் சேர்ந்து கையொப்பம் செய்து தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். கூடுதல் எதிர் வழக்குரையானது நான் மட்டும் கையொப்பம் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கூடுதல் எதிர் வழக்குரையில் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட எதிர் வழக்குரையின் சங்கதிகளை ஏற்றுக் கொள்ளுமாறு தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான்.

3) 14.12.2016ம் தேதி வாதிகளுக்கு எதிராக கேவியட் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கேவியட் மனுவில் இந்த அசல்

வழக்கில் கண்ட வழக்கு சொத்துக்களுக்கும், மற்றும் சர்வே எண்.183/5ல் கண்ட 55 செண்ட் விஸ்தீரணத்திற்கும் சேர்த்து தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி கேவியட் மனுவில் 3வது அயிட்டமாக கண்ட 58 செண்ட்டிற்கான நான்குமாலில் மேற்குபுறம் சண்முகம் புஞ்சை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சண்முகம் என்பவர் 4ம் வாதியின் தகப்பனார் என்றால் சரிதான். வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை வழக்கறிஞர் மூலம் அறிந்து கொண்டேன். வாதிகள் தாக்கல் செய்துள்ள ஆவணங்களான பாகப்பிரிவினை ஆவணம், பட்டா, கிஸ்தி, அடங்கல் ஆகிய ஆவணங்கள் வாதிகள் பெயரில் உள்ளது என்றால் சரிதான்.

4) நான் எனது கூடுதல் எதிர் வழக்குரையில் வழக்கு சொத்துக்கள் அனுபவ பாத்தியம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான், மூன்று தலைமுறையாக அனுபவம் செய்து வருகிறோம். இந்த விபரங்களை முதலில் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், அனுபவ பாத்தியம் என்பதை தெரிவித்துள்ளேன். எதிர்வழக்குரையில் பாரா 6ல் வழக்கு சொத்துக்களுக்கு வாதிகள் உரிமையாளர்கள் இல்லை என்று தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். பட்டா எண்.2131க்கு கிஸ்தி செலுத்தியுள்ளதாக தெரிவிக்கும் நிலையில், அதற்கான வரி ரசீதுகளை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் கிரையம் வாங்கிய பி.வா.சா.ஆ.2ல் கண்ட சர்வே எண்.183/5ல் கண்ட 58 செண்ட் பொறுத்து எவ்வித தாவாவும் வாதிகள் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.183/5ல் கண்ட சொத்து குறித்து எனக்கோ, வாதிகளுக்கோ வேறு எந்த தாவாவும் இல்லை என்றாலும், வழக்குகளும் இல்லை என்றாலும் சரிதான்.

5) சண்முகம் செட்டியாரின் மகளான வேதவள்ளி குறித்து தெரியுமா என்றால் தெரியாது. வேதவள்ளி என்பவர் என்னிடம் வழக்கு சொத்துகள் பாகம் பிரிக்கப்படவில்லை என்றோ, பாகப்பிரிவினையில் பிரச்சனை உள்ளது என்றோ எதாவது தகவல் சொன்னாரா என்றால் இல்லை. 5ம் வாதி ராஜகோபால் என்பவர் ஆவணம் எழுதித் தருவதாக சொல்லி என்னிடம் ரூ.42,000/- பணம் வாங்கிக்

கொண்டார் என்று நான் தெரிவிக்கும் நிலையில் பணம் வாங்கியது தொடர்பாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ராஜகோபால், அவரது தந்தை சண்முகம், ராஜகோபாலின் மனைவி, சண்முகத்தின் மனைவி அங்கம்மாள் ஆகியோர் சேர்ந்து என்னிடமிருந்து ரூ.42,000/- பணம் வாங்கினார்கள்.

6) வழக்கு சொத்திற்கு வாதிகள் உரிமையாளர்கள் இல்லை என்று நான் தெரிவிக்கும் நிலையில், எதற்காக ரூ.42,000/- பணத்தை அவர்களுக்கு கொடுத்ததாக சொல்லப்படுவதற்கு தனிப்பட்ட காரணம் என்ன என்றால் வழக்கு சொத்துக்கள் அவர்கள் பெயரில் இருப்பதால் கிரையம் செய்து வாங்குவதற்காக பணத்தை கொடுத்தேன். ஆண்டிச்சாமிக்கோ, எனக்கோ வழக்கு சொத்துக்களை பொறுத்து தனிப்பட்டாவோ, உழவடை பட்டாவோ, பத்திரமோ உள்ளதா என்றால் இல்லை. சர்வே எண்.183/5 ஆனது வாதிகளின் பாகபிரிவினை ஆவணத்தில் தவறுதலாக காட்டப்பட்டுள்ளது என்று நான் சொல்லும் நிலையில் அதற்காக பாகபிரிவினை ஆவணத்தில் இருந்து மேற்படி சர்வே எண்ணை நீக்கம் செய்ய வேறு வகையில் சட்டப்பூர்வமான நடவடிக்கை எதுவும் நான் எடுத்தேனா என்றால் வழக்கறிஞரிடம் தெரிவித்துள்ளேன், அவர் நடவடிக்கை எடுப்பதாக சொல்லியுள்ளார்.

7) வழக்கு சொத்தில் ஆண்டிச்சாமியின் வாரிசுதாரர்களுக்கு உரிமையுள்ளது. வீட்டு வரி ரசீதில் சர்வே எண் குறிப்பிடுவதில்லை என்றால் சரிதான், வீட்டு வரி ரசீதில் கண்ட கதவு எண்ணிற்கும், நான் சொல்லும் சர்வே எண்ணில்தான் அந்த வீடு அமைந்துள்ளது என்பதற்கும் தொடர்புகளை காட்டக்கூடிய ஆவணங்கள் எதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் நான் தரப்பினராகவும் இல்லை, சாட்சியாகவும் இல்லை என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் என்ன எழுதியுள்ளது என்ற விபரங்கள் தெரியாது என்றால் சரிதான். சண்முகம் என்பவருக்கு சிவசங்கரன், ராமகிருஷ்ணன், ராஜகோபால், ஆறுமுகம், வேதவள்ளி ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். சண்முகம் என்பவரின் மனைவி அங்கம்மாள் என்பவரும்

இறந்துவிட்டார் என்றால் சரிதான். சிவசங்கரன் என்பவருக்கு சுசிலா என்பவர் மனைவி என்றாலும், சசிக்குமார், கிஷோர்குமார் ஆகியோர் மகன்கள் என்றாலும் சரிதான்.

8) ஆதியில் வழக்கு சொத்துக்கள் நாகலிங்கம் என்பவருக்கு பாத்தியம் என்றால் சரிதான். நாகலிங்கம் என்பவருக்கு பெரியண்ணன், குமாரலிங்கம் ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். மேற்படி நபர்களுக்கு இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினையில் எதுவும் தாவா இல்லை என்றாலும், வழக்குகள் எதுவும் இல்லை என்றாலும் சரிதான். 1ம் பிரதிவாதி ஆண்டிச்சாமி என்பவர் எனது மாமனார் என்றால் சரிதான், அவரது குடும்பத்திலிருந்து வேறு யாராவது சாட்சியம் அளிக்க வருவார்களா என்றால் வருவார்கள். வாதிகள் இந்த தாவா வழக்கை தாக்கல் செய்த போது வாதிகள் தரப்பில் ரூபாய் 3000 தொகையை 1ம் பிரதிவாதி ஆண்டிச்சாமி பெற்றுக்கொள்ள சொல்லி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் அது பற்றிய பேச்சுவார்த்தை நடந்தது, அதன் விபரங்கள் தெரியாது. எனக்கும், தாவா வழக்கு சொத்துக்களுக்கும், தாவா வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல.

9) வழக்கு சொத்துக்களில் விவசாயம் செய்து கொள்வதற்கு 1ம் பிரதிவாதி ஆண்டிச்சாமிக்கு ரூபாய் 3000 பெற்றுக்கொண்டு வாதிகளால் உடன்படிக்கை ஆவணம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது என்றாலும், நான் சொல்லும் விதத்தில் வழக்கு சொத்துக்களில் அனுபவம் எனக்கு எதுவும் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. நான் தான் வழக்கு சொத்துக்களில் உள்ளேன் என்றும், ஆண்டிச்சாமி வழக்கு சொத்துக்களில் இல்லை என்றும் சொல்கிறேன் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களில் நான் மட்டும்தான் அனுபவத்தில் உள்ளேன் என்றும், ஆண்டிச்சாமி என்பவர் அனுபவத்தில் இல்லை என்றும், நான் தாக்கல் செய்த கேவியட் மனுவிலோ, எதிர் வழக்குரையிலோ வழக்கில் வேறு எந்த இடத்திலும் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. வாதிகள் வழக்கு சொத்துக்களை ஆண்டிச்சாமி என்பவருக்குதான் விவசாயம் செய்ய ஒப்படைப்பு செய்தார்கள் என்றாலும்,

ஆண்டிச்சாமி என்பவரின் மருமகன் என்ற முறையில் நான் அதில் ஆக்கிரமிப்பாளராக உள்ளேன் என்றாலும் சரியல்ல.

10) வழக்கு சொத்துக்களுக்கு வாதிகள்தான் உரிமையாளர்கள் என்றாலும், ஆண்டிச்சாமிக்கோ, அவரது வாரிசுதாரர்களுக்கோ சொத்திலிருந்து வெளியேற மாட்டேன் என்று சொல்வதற்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும், ஆக்கிரமிப்பாளரான நானும் சொத்திலிருந்து வெளியேற மாட்டேன் என்று சொல்வதற்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களை வாதிகள் வசம் ஒப்படைப்பு செய்வதற்கு எனக்கும் ஆண்டிச்சாமியின் வாரிசுகளுக்கும் பொறுப்பு மற்றும் கடமை உள்ளது என்றால் சரியல்ல. வாதிகள் கோரியுள்ள பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 16.03.2026 கையெழுத்து செய்துள்ளார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.03.16 15:17:45 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.